


திருப்பத்தூரில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டுத் துறை சார்பில் அமையவுள்ள மாவட்ட விளையாட்டு வளாகத்திற்கு நெடுஞ்சாலை மற்றும் பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அடிக்கல் நாட்டி பேசினார். மாவட்ட ஆட்சியர் சிவ.சௌந்தரவல்லி, அ.நல்லதம்பி எம்.எல்.ஏ., எஸ்.ராஜேந்திரன், ஆர்.எஸ்.ஆனந்தன் மற்றும் மாவட்ட, நகர ஒன்றிய நிர்வாகிகள் உடன் உள்ளனர்.




கடலூரில் பல்வேறு விழாக்களில் பங்கேற்ற கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு கடலூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் – வேளாண் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர் செல்வம் நினைவுப் பரிசு வழங்கினார்.

### தமிழ்நாட்டிற்கு ஒன்றிய அரசு ரூ.2000 கோடி கல்வி நிதி வழங்க மறுப்பு!

# முதலமைச்சரின் சிறப்பு திட்டத்திற்கு ரூ.10 ஆயிரம் வழங்கிய சிறுமி!

### கடலூரில் பொதுமக்கள் – ஆசிரியர்கள் – மாணவர்கள் சிறுமியை பாராட்டினர்!

**கடலூர், பிப். 24-**

**தமிழ்நாட்டிற்கு ஒன்றிய அரசு ரூ.2152 கோடி கல்வி நிதி வழங்க மறுப்பு தெரிவிக்கும் நிலையில், முதலமைச்சரின் சிறப்பு திட்டத்திற்கு ரூ.10 ஆயிரத்தை கடலூரைச் சேர்ந்த எல்.கே.ஜி. படிக்கும் மாணவி நன்முகை வழங்கினார். இச்சிறுமியின் செயலை கடலூர் மாவட்டத்தை சேர்ந்த பொதுமக்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் வெகுவாக பாராட்டினர்.**

எல்.கே.ஜி. வகுப்பு படிக்கின்ற கடலூர் மாவட்டத்தை சார்ந்த நன்முகை என்ற சிறுமி ஒன்றிய அரசு தர மறுத்த 2000 கோடி ரூபாய்க்கு, தன் பங்களிப்பாக தனது சேமிப்பிலிருந்து ரூபாய் 10000ஐ தமிழ்நாடு முதல்வர் அவர்களின் சிறப்புத் திட்டத்திற்காக நிதி அளித்துள்ளார்என்பது குறிப்பிடத்தக்கதாகும்.



இக்குழந்தையின் பெற்றோர்,மருத்துவர்கள் டாக்டர் பால.கலைகோவன், டாக்டர் கிருஷ்ணப்பிரியா ஆவர். இச்சிறுமியின் தாத்தா பாலசுப்பரமணியன் (தமிழ் ஆசிரியர், தலைமை ஆசிரியர் ஓய்வு, உளுந்தூர்பேட்டை அரசு உயர்நிலை பள்ளி), பாட்டி சாந்தி, (தமிழ் ஆசிரியை) உதவி தலைமை ஆசிரியர், (கோட்டக்குப்பம்), இவருடைய பெரியம்மா Dr. கல்பனா, ph D Gold medalist (தமிழ்) அரசு கலைக்கல்லூரி , விருத்தாச்சலம்,

இச்சிறுமிக்கு 4 வயது ஆகிறது. கடலூர் அரிஸ்டோ ப்பளிக் பள்ளி LKG படித்து வருகிறார்.

இச்சிறுமியின் இச்செயலை அப்பகுதியில் சேர்ந்த பொதுமக்கள், ஆசிரியர்கள், மாணவர்களும் பாராட்டினர். அச்சிறுமி தன் மழலை மொழியில் பேசுகையில் ஒன்றிய அரசு படிப்புக்காக பணம் கொடுக்கவில்லை. அதனால் கல்விக்காக முதல்வர் அவர்களின் சிறப்பு திட்டத்திற்காக எனது சேமிப்பு பணத்தை மகிழ்ச்சியுடன் வழங்கினேன் என சிறுமி நன்முகை கூறினார்.



திராவிட இயக்க ஆய்வாளர் க.திருநாவுக்கரசு அவர்கள் எழுதிய சுயமரியாதை இயக்க வரலாறு – இரண்டு பாகங்கள் நூலை திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி அவர்கள் வெளியிட கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. பெற்றுக் கொண்டார். விழாவிற்கு தொ.மு.ச. பேரவை பொதுச் செயலாளர் மு.சண்முகம் தலைமை வகிக்க பேரவைத் தலைவர் கி.நடராசன் வரவேற்றுப் பேசினார். நூல் ஆசிரியர் க.திருநாவுக்கரசு அவர்கள் அறிமுக உரை நிகழ்த்தினார். இவ்விழாவில் திராவிட இயக்க தமிழர் பேரவை தலைவர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன், கழக செய்தித் தொடர்புத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், கழக மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. , திராவிடர் கழக பிரச்சார செயலாளர் வழக்கறிஞர் அ.அருள்மொழி ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்தினர். திராவிடர் கழக துணைப் பொதுச் செயலாளர் ச.பிரின்ஸ் என்.ஆர்.எஸ்.பெரியார் இணைப்புரையாற்றினார். நக்கீரன் பதிப்பகம் தி.சிற்றரசு நன்றி கூறினார்.

### மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பிரசன்னா தலைமை!

# திண்டிவனத்தில் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டம்!

### விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் அறிக்கை!

*செஞ்சி, பிப். 24-*

மும்மொழி கொள்கை மூலம் தமிழ்நாட்டில் இந்தியைதிணிக்கமுயற்சிக்கும் ஒன்றிய பாஜக அரசை கண்டித்து திண்டிவனத்தில் நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏகண்டன உரை நிகழ்த்துகிறார். மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பிரசன்னா தலைமை தாங்குகிறார்.

இதுகுறித்துவிழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ தனதுஅறிக்கையில் கூறுகையில்:

ஒன்றிய அரசின் பட்ஜெட்டில் தமிழகத்திற்கு எதுவும் செய்யவில்லை கல்விக்கு வழங்க வேண்டிய நிதியைஒன்றிய அரசு வழங்கவில்லை தமிழ்நாடு மக்கள் கட்டிய வரிப்பணத்தை பெற்றுக் கொண்டு ஒன்றிய அரசு நிதி வழங்க மறுக்கிறது.

கல்வி என்பது ஒத்திசை பட்டியலில் தான் உள்ளது



ஒன்றிய அரசின் நிபந்தனைகளை மாநிலங்கள் ஏற்க வேண்டிய அவசியம் இல்லை கடந்த ஒன்றிய அரசின் நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாடு என்ற பெயரே இடம் பெறவில்லை அப்புறம் எப்படி தமிழ்நாட்டிற்கு சிறப்பு திட்டங்கள் கிடைக்கும் ஒன்றிய அரசு மும்மொழி கொள்கையை ஏற்றால் தான் பள்ளி கல்வித்துறைக்கு வழங்க வேண்டிய தொகையை வழங்குவோம் என்று மிரட்டி நிதியை முழுமையாக நிறுத்தி வைத்திருக்கிறது. மும்மொழி கொள்கையின் மூலமாக தமிழ்நாட்டில் இந்தியை திணிக்க முயற்சி செய்கிறது.

நம் மாணவர்களின் கல்விக்கான நிதியை விடுவிக்க மும்மொழி கொள்கையை ஏற்க வேண்டும் எனக் கூறும் ஒன்றிய அரசை தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் வழியில் திராவிட மாடல் அரசு கடுமையாக எதிர்த்து வருகிறது. மேலும்

தாய்மார்களும்,அன்பு சகோதரிகளும்,தங்களது இல்லங்கள் முன்பாக இந்தி திணிப்பை என்றும் எதிர்ப்போம் என்று கோலமிட்டு ஒன்றிய பாஜக மோடி தலைமையிலான பாசிச ஒன்றிய அரசையும்,ஒன்றிய கல்வி அமைச்சர் தன்மேந்திர பிரதான் ஆகியோருக்கு நமது கண்டனங்களையும்,எதிர்ப்புகளையும் பதிவு செய்வோம்.

மேலும் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க விழுப்புரம் வடக்கு மாவட்ட மாணவரணி சார்பில்தமிழ்நாட்டில் மும்மொழி கொள்கை மூலம் இந்தியை திணித்திடும் ஒன்றிய பாஜக அரசை கண்டித்துவிழுப்புரம் வடக்கு மாவட்டம் திண்டிவனம் தலைமை தபால் நிலையம் அலுவலகம் எதிரில் நாளை (25.2.2025 செவ்வாய் கிழமை) காலை 10.00 மணிக்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பிரசன்னா தலைமையில் விழுப்புரம் வடக்கு மாவட்டபொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கண்டன உரை நிகழ்த்துகிறார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கிளை கழக நிர்வாகிகள், அனைத்து அணி பொறுப்பாளர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், பொதுமக்கள் என அனைவரும் ஆர்ப்பாட்டத்தில் பெரும் திரளாக கலந்துகொள்ள வேண்டும் என தனது அறிக்கையில் மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தெரிவித்துள்ளார்.



விழுப்புரம் மாவட்டம் செஞ்சியில் இந்திதிணிப்பை கண்டித்தும்,கல்விக்கு நிதி ஒதுக்காகபாஜக அரசை கண்டித்து விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கண்டனம் தெரிவித்து, பொதுமக்களுக்கு துண்டு பிரசுரம் வழங்கி பிரச்சாரம் செய்தார். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், ஒன்றிய செயலாளர்கள் செஞ்சி மேற்கு பச்சையப்பன் ஒலக்கூர் மேற்கு ராஜாராமன் ஆகியோர் உள்ளனர்.

# கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் தா.உதயசூரியன் எம்.எல்.ஏ. அறிக்கை!



*கள்ளக்குறிச்சி, பிப். 24-*

கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட கழக செயலாளர் தா.உதயசூரியன் எம்.எல்.ஏ. அறிக்கை வருமாறு:-

கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட கழகம் சார்பில் செயற்குழு ஆலோசனை கூட்டம் 24.02.2025 இன்று (திங்கட்கிழமை) மாலை 4.00 மணியளவில் மாவட்ட கழக அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற இருப்பதால்,

கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய,நகர, பேரூர் கழக செயலாளர்கள், அனைத்து சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் மாவட்ட துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்தநாள் விழா சிறப்பாக கொண்டாடுவது குறித்தும், கழக ஆக்க பணிகள் குறித்தும் ஆலோசிக்கப்படவிருக்கிறது.

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

# மதுரை மாநகர் மாவட்டத்தில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

### மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. அறிக்கை!



*மதுரை, பிப். 24-*

மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. அறிக்கை வருமாறு:-

தமிழ்நாட்டு மாணவர்களின் கல்வி உரிமையைப் பறிக்கும் விதமாக செயல்பட்டு வரும் ஒன்றிய பாஜக அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் மதுரை மாநகர் மாவட்ட திமுக மாணவரணி சார்பில் மாணவரணி அமைப்பாளர் துரை கோபால்சாமி தலைமையில் நாளை (25.02.2025 செவ்வாய்க்கிழமை) காலை 9.30 மணியளவில் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் எதிரில் உள்ள தபால் நிலையம் அருகில் நடைபெறவுள்ளது. கழக மாணவர் அணியினர், மாணவர் அமைப்பினர் மற்றும் மாணவர்கள் அனைவரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்று ஒன்றிய பாஜக அரசிற்கு கடும் கண்டனத்தைப் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



மதுரை வடக்கு மாவட்டம் மதுரை மேற்கு சட்டமன்ற தொகுதி கழக பொது உறுப்பினர்கள் கூட்டம் விளாங்குடி கலைஞர் திடலில் மாநாடு போல் நடைபெற்றதில் மாவட்ட செயலாளர்,வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி சிறப்புரையாற்றினார். மேலும் இக்கூட்டத்தில் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன், ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ. கழக நிர்வாகிகள் பொன் முத்துராமலிங்கம், வ.வேலுசாமி, பெ.குழந்தைவேலு, தனச்செல்வம், ஜி.பி.ராஜா, ஜெயராம், மேயர் இந்திராணி பொன்வசந்த், எம்.ஆர்.எம்.பாலசுப்பிரமணியன், சோமசுந்தர பாண்டியன், டாக்டர்.திலீப் ராஜகண்ணப்பன், சௌந்தர்ராஜன், அன்பழகன், மதிவெங்கடேஷ், சுதன், காவேரி, தவமணி, ஆர்.கே.ஜெயராமன், ராஜாமணி மற்றும் கழக நிர்வாகிகள், பங்கேற்றனர்.